9th February 1959]

Devanathaswami Devasthanam lands

* 147 *Q.*—SRI A. GOVINDASAMY: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கடலூர் தாலூகா, திருவேந்திபுரம் தேவனாதஸ்வாமி தேவஸ்தானத்துக்கு எத்தனை எக்கர் நிலங்கள் இருக்கின்றன?

(ஆ) ஸ்வாமிக்குச் சொந்தமான நகைகள் மதிப்பீடு என்ன?

(இ) இந்த நகைகள் யார் பொறுப்பிலிருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 31·10 acres wet lands.

38·69 acres dry lands.

Lands endowed specifically for the performance of certain kattalais :—

32·97 acres wet.

151·86 acres dry.

(*b*) Rs. 2,04,375.

(*c*) They are in the custody of Sri Krishnamurthi Bhattacharya, Archaka of the temple.

SRI A. GOVINDASAMY : இந்தக் கோவில் நிலங்களும், கோயிலுக்குச் சொந்தமான நகைகளும் அந்தக் கோவிலைச் சேர்ந்த தர்மகர்த்தாக் களிடமே ஒப்படைக்கப்படவில்லை? தர்மகர்த்தாக்களிடம் இல்லாமல் பட்டாச் சாரியரிடம்-அர்ச்சகரிடம் ஏன் ஒப்படைக்க வேண்டும் ? 9-40 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ஆலயம் சம்பந்தப் பட்ட வரையில் கீழ்க் கோர்ட்டின் தீர்ப்புப்படிதான் அறநிலைய பாதுகாப்பு இலாகாவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாக் கோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து இப்பொழுது ஹைகோர்ட்டிலும் அப்பீல் செய்யப்பட்டிருக் கிறது.

SRI A. GOVINDASAMY : இது விஷயமாக அரசாங்கத்தார்........

MR. SPEAKER : கோர்ட்டில் வழக்கு இருக்கிறது என்கிறபோது கேள்வி கேட்பது உசிதம் இல்லை.

SRI A. GOVINDASAMY : தீர்ப்பு ஆகிவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜில்லா கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

Andipatti Central Jail

* 148 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Central Jail, at Andipatti has since been closed; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Jail was closed down because convict labour was not required on the Vaigai Reservoir Project Works beyond 31st May 1958.